விவசாயப்

பழமொழிகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 APR 1928
MADRAS

கடம்பூர் ரேஞ்சு
பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர்
V. M. சவுந்தரராஜய்யரவர்கள் B.A., L.T.,
எழுதியது.

மதுரை புத்தகவியாபாரம்
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

1928

[விலை அணா 4.

J

N2?

Printed at
The Excelsior Press,
Madura.

58966

முகவுரை.

நமது இந்தியா தேசத்தில் பெரும்பாலான மக்களுக்கு விவசாயமே தொழிலாகவும் பூர்வீக வழக்கமாகவும் இருந்து வருகிறது. விவசாயத்தின் செழிப்பை வைத்தே தேசம் செழிப்படைகின்றபடியாலும், செழிப்படைந்துள்ள தேசமே மற்றைத் தேசத்தார் குடியேறிப் பிழைத்தற்கிடமாகின்ற படியாலும் நமது தேசம் வடக்கே இமயமலைப் பிரதேசத்திலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலும் பாவி, சிந்து, கங்கை, பிரமபுத்திரா, தபதி, யமுனை, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, வைகை, தாம்பிரவர்ணி முதலிய பல மகா நதிகள் பாய்ந்து விவசாயஸ்தானம் எனச் செழிப்படைந்து எத்தனையோ பிரதேச மக்களைத் தன் மக்களோடு சேர்த்து ஆதரித்து வருகின்றது'' என்பது கூறாமலே அமையும். க்காரணம் பற்றி ஆரம்பத்திலேயே கல்வியோடு விவசாய முறையையும் இந்திய மாணவர்களுக்குப் போதித்து வரவேண்டுமென்து அரசாங்கத்தாரின் முக்கிய நோக்கம்.

“இளமையிற் கற்பது சிலையிலெழுத்து'' என்ற முதுமொழிப் விவசாயத் தொழில் முறையையும் கலாசாலை மாணவர்கள் வியோடு கலந்தறிய வேண்டியது மிகவும் அவசியம் பற்றி, ல் வகுப்புகளில் விவசாயத்திற்கு உரியனவற்றை ஆராய்ந்து ற்பதற்கு ஆசையூட்ட வல்லதாக ஆரம்பத்திலேயே மாணவர் எளிதிற் கற்றுணரத்தக்க முறையில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளபடியால் இதனைக் கலாசாலை ஆசிரியர்கள் நன்கு ஆதரித்தும், பழமொழிகளை 3 வது 4 வது வகுப்பு மாணவர்களுக்கும், திருக்குறளினது வான்சிறப்பு உழவு என்ற அத்தியாயங்களை 5 வது வகுப்பு மாணவர்களுக்கும் பாடமாக ஏற்றுக்கொண்டு செய்யுட் பாடத்தைப் போல உபயோகித்தும் வருவார்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை

உ

உரிமை உரை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

முன்னுறு இன்ற முயற்சி பலவற்றுள்
தன்னுயி ரோம்பித் தரித்தல் பொருட்டாய்
சேவகா விர்த்தியும் சிறந்த தென்ன
மேவி உழைப்பவர் மிகுந்தவிந் நாளில்
தொழுது புசித்தல் துன்பம் இழிவென
உழுது புசித்தல் உயர்வென வாங்கே
சீல மெல்லாம் தேடிவந் தடையக்
கால மெல்லாம் கருதி முயன்று
விவசா யத்தையே விருத்தி செய்திட்ட
தவநெறி வழுவாத் தந்தையெம் பெருமைசால்
முத்து வையர் முன்னரிந் நூல்தான்
ஒத்த உரிமை யாகுக உகந்தெனைத்
தந்த தந்தைக்குயான் சமர்ப்பித்தல் கடனே!

இங்ஙனம்,

வி. மு. சவுந்தரராஜய்யர்,
டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்,
கடம்பூர் ரேஞ்,

விவசாயப் பழமொழிகள்.



1 அகல உழுவதை ஆழ உழு.

2. அடைப்பில்லாக் காடும், விடுப்பில்லா ஏரும் பயன்படா.

3. அண்டை நிலத்தையும், அயல் மனையையும் கைவிடாதே.

4. ஆட்டுரம் ஓராண்டு நிற்கும்;
மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்.

5. ஆடு அப்பூ, ஆவரை முப்பூ,
எரு எப்பூ.

6. ஆடு பயிர் காட்டும்;
ஆவரை நெல் காட்டும்.

7. ஆடே படைப்பு; ஆரியமே
வேளாண்மை.

8. ஆழவுழுதல் ஆட்டுரத்துக்கும்
அதிகம்.

9. ஆழ உழுதாலும் அடுக்க உழு.

10. ஆற்று மண்ணுக்கு
வேற்றுமண் உரம்.

11. இளைத்தவன் எள்ளை
விதைப்பான்.

12. ஈர விதைப்பும், ஈரூர் வேளாண்மையும்,
தார மிரண்டும் தனக்குப் ப[illegible]

13. உழவற உழுதால்
விளைவற விளையும்.

14. உழவிலும் பகை
எருவிலும் தீராது.

15. உழவு உழுது காய்ந்தால்
வித்திரட்டி காணும்.

16. உழவு நட்பில்லாத நிலமும்
மிளகு நட்பில்லாத கறியும்
வழவழ.

17. உழுது அலர்ந்தது
பழுதாகாது.

18. எண்ணெய் காணாத மயிரும்,
தண்ணீர் காணாத பயிரும்.

19. எருவில்லாப் பயிர்
கன்றில்லா மாட்டைப் போல்.

20. எள்ளுப் பயிரானாலும்
நெல்லுப்பயிர் செய்.

21. கச்ச நிலமானாலும்
கைசேர்க்கை நன்று.

22. கடலை விதைப்பது
கரிசல் நிலத்தில்.

23. கம்புக்குக் கால் உழவு.

24. கரும்பு வைப்பது
காணி நிலத்தில்.

25. கலக்க விதைத்தால்
களஞ்சியம் நிறையும்;
அடர விதைத்தால்
அடுபோர் உயரும்.

26. கல்லைப்பிளந்துகாணம்விதை.

27. கள்ளி வேலியே வேலி;
கரிசல் நிலமே நிலம்.

28. களை யெடாதவன்
விளை வெடான்.

29. களையெடாப் பயிர் கால் பயிர்.

30. காடு வளம் குண்டை வளம்,
குண்டை வளம் குடி வளம்,
குடி வளம் கோயில் வளம்,
கோயில் வளம் கோன் வளம்.

31. கார் ஆடு; பிசானம் கொழை.

32. காராம்பசுவிற்குப் புல்லுமாம்;
நந்தவனத்திற்குமழையுமாம்.

33. கிணற்றைக் காத்தால்
வயிற்றைக் காக்கும்.

34. குப்பை உயர்ந்தால்
குடி உயரும்.

35. கொம்பால் உழுது
குண்டியால் மரமடி.

36. கோப்புத் தப்பினால்
குப்பையும் பயிராகாது.

37. சாண் உழவு முழ எருவுக்குச்
சமானம்.

38. சாமைப் பயிர் விளைந்தால் தெரியும்.

39. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.

40. சோளப் பயிர் மேய்ந்த மாட்டுக்கு சுவர்க்கலோகம் வேண்டுமோ ?

41. சோற்றுக்கு ஏமாந்தவன் சோளத்தை விதை.

42. தாழ உழுதால் தளிரோடும்.

43. திணை விதைக்க வினை விளையுமா ?

44. தை உழவு ஐயாட்டுக்கிடை.

45. தொழுதூண் சுவையினும் உழு தூண் இனிது.

46. நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்.

47. பசித்தவன் பயறை விளை.

48. பசு உரத்திலும் பழம் புழுதி நல்லது.

49. பருவத்தே பயிர் செய்.

50. புகையிலைக்குப் புழுதிக் கொல்லை.

51. புல்லற உழாதே.

52. புன்செயில் புதியது; நன்செயில் பழையது.

53. புழுதி உண்டானால் பழுதில்லை.

54. போடு காலில் தேடிப் போடு.

55. மடையன் வரகு விதை.

56. மணல் உழுது வாழ்ந்தவனும் இல்லை, மண் உழுது கெட்டவனும் இல்லை.

57. மாடு மேயாத மட்டப் புற்
கட்டையை
ஆடு மேய்ந்து அதி திருப்தி
யாகும்.

58. மாட்டு எரு புன்செய்க்கு;
தழை எரு நன்செய்க்கு.

59. மாரி யல்லது காரிய மில்லை.

60. மேழிச் செல்வம்
கோழை படாது.

61. வரப்புத் தேய வயிறு
நிறையும்.

62. வெக்கைக்கு வேலி மறைப்பு.

63. வெண்ணெய் போல் உழவும்
குன்று போல் விளைவும்.

வான் சிறப்பு.

1. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்
துப்பாய தூஉ மழை. [பார்க்குத்

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனு
துண்ணின் றுடற்றும் பசி. [லகத்

4. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன் றிக் கால்.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்
யெடுப்பதூஉ மெல்லா மழை. [மற்றாங்கே

6. விசும்பிற் றுளி வீழி னல்லான் மற்றாங்கே
பசும்புற் றலை காண் பரிது.

7. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்
தானல்கா தாகி விடின். [தெழிலி

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

9. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(திருக்குறள்.)

உழவு.

1. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை.

2. உழுவா ருலகத்தார்க் காணி யஃதாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்
தொழுதுண்டு பின்செல் பவர். [லாந்

4. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க்காண்ப
ரலகுடை நீழ லவர்.

5. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவ
விட்டேமென் பார்க்கு நிலை. [தூஉம்

7. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்
வேண்டாது சாலப் படும். [தெருவும்

8. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

9. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

10. இலமென் றசை இ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(திருக்குறள்)

விவசாயப் பழமொழிகள்.

1. அகல உழுவதை ஆழ உழு.

பயிரின் வேர்கள் பூமிக்குள் சென்று, அதற்கு வேண்டிய உணவுப் பொருளையும் தண்ணீரையும் கொண்டு வருகின்றன. இதற்குப் பூமியை நன்றாக உழுது புழுதியாக்கவேண்டும். ஆகையினால் அகலமாக உழுவதைக் காட்டிலும் ஆழமாக உழுவது நல்லது. ஆழமாக உழுதால் சொற்ப நிலத்தில் அதிக மாசூல் கிடைக்கும்.

நமது தேசத்தில் குடியானவர் நாட்டுக் கலப்பையைக் கொண்டு உழுகின்றனர். அதன் கொழு பூமியில் ஆழமாகச் செல்வதில்லை. இலேசாகத்தான் பதிகிறது. தற்காலம் வந்திருக்கும் சீமைக் கலப்பையை உபயோகப் படுத்தினால் ஆழமாக உழுவதற்குச் சிறந்த சாதனமாக இருக்கும். பயிரும் செழித்து வளரும்.

2. அடைப்பில்லாக் காடும், விடுப்பில்லா ஏரும் பயன்படா.

காடுகளுக்கு அடைப்பு இருக்கவேண்டும். இல்லாவிடில் ஆடுமாடுகள் நுழைந்து அவற்றை மேய்ந்து அழித்துவிடும். பெரிய காற்றினல் பயிர்கள் கெட்டு விடாமல் வேலி காப்பாற்றும். ஆகையால் வேலி இல்லாத காடு அழிந்துவிடும்.

ஏரைப்பிடித்து உழும்பொழுது நிலத்தில் ஆழ அழுத்தி உழவேண்டும். இல்லாவிடில் விதைகள் சரியாய் முளைத்து நல்ல விளைவு உண்டாகாது. ஆழ அழுத்தி உழாத உழவு பயனில்லை.

3. அண்டை நிலத்தையும், அயல் மனையையும் கைவிடாதே.

ஒருவனுடைய நிலத்திற்குப் பக்கத்திலுள்ள வேறு நிலம் விலைக்கு வந்தால் அவன் அதை வாங்கிவிடவேண்டும். அதை வாங்காது கைவிட்டுவிடக்கூடாது. நிலங்கள் பக்கத்திலே சேர்ந்திருந்தால் அடிக்கடி கவனிப்பதற்கும், நீர் பாய்ச்சுவதற்கும் சௌகரியமாயிருக்கும்.

தூரத்திலுள்ள நிலங்களுக்கு ஏர்களைக்கொண்டு போவதும், திரும்பக் கொண்டுவருவதும் சிரமம்.

ஒருவனுடைய வீட்டுக்குப் பக்கத்து வீடு விலைக்கு வந்தால் அதையும் வாங்கவேண்டும். பக்கத்தில் வீடு இருந்தால் அடிக்கடி கவனித்து விருத்திக்குக் கொண்டுவரலாம். பின்னல் அவன் சந்ததியார்கள் சேர்ந்து வசிப்பதற்கும் உதவும்.

4. ஆட்டுரம் ஓராண்டு நிற்கும்; மாட்டுரம் ஆறுண்டு நிற்கும்.

பயிர்கள் தங்கள் வளர்ச்சிக்காகப் பூமியின் சாரத்தைக் கிரகித்துக்கொள்ளுகின்றன. அது மட்டுமே அவைகள் வளர்வதற்குப் போதுமானதன்று. ஆடுமாடுகளுக்கும் மனிதருக்கும் அதிக உணவு வேண்டியிருக்கின்றது. அது போலவே பயிர்களுக்கும் போதுமான உணவு வேண்டும். அவைகள் எருவிலிருந்து அந்த உணவைப் பெறுகின்றன. எருவிடா நிலத்தில் பயனும் அதிகமாய் இராது. எருவில் ஆட்டு எருவைப் பார்க்கிலும் மாட்டு எரு நல்லது. ஆட்டு எரு கொஞ்ச நாளைக்குத்தான், அதாவது ஒரு வருஷத்துக்கு மட்டும் பயிர்

களுக்கு உணவு கொடுக்கும். மாட்டு எரு ஆறு வருஷம் பயிர்களை வளர்க்கும். மாட்டு எருவை அடுப்பெரிக்காமல் பத்திரமாய்ச் சேர்த்து வைத்து நிலங்களில் போடவேண்டும். அப்படிப் போட்டால் அதிகப் பலன் கிடைக்கும்.

5. ஆடு அப்பூ, ஆவரை முப்பூ, எரு எப்பூ.

ஆட்டு உரம் ஒரு பூ, அதாவது ஆறுமாதத்திற்கு உதவும். ஆவரங் கொழை மூன்று பூ, அதாவது ஒன்றரை வருடத்திற்கு நல்ல உரமாயிருக்கும். மாட்டுரம் எக்காலத்திலும் நிலத்தை விருத்திசெய்து பயிரைப் போஷித்து வளர்க்கும்.

6. ஆடு பயிர் காட்டும்; ஆவரை நெல் காட்டும்.

ஆட்டுரத்தினால் பயிர்தான் அதிகமாக வளரும். அதனால் வைக்கோல் அதிகமாகக் கிடைக்கும்; ஆனால் நெல் அதிகம் கிடைக்காது. நெற்பயிருக்கு நல்ல உரம் ஆவரங் கொழை. ஆவரைச் செடிகளைக் களைந்து நன்செய்யில் உரமாகப் போட்டால் நெல் அதிகமாகக்

காணும். நெற்பயிருக்குப் பசுந்தாள் அல்லது கொழையே சிலாக்கியமான உரமாகும்.

7. ஆடே படைப்பு; ஆரியமே வெள்ளாமை.

குடியானவன் தேடவேண்டிய பொருள் ஆடு மாடுகள். அவற்றை வைத்துத்தான் விவசாயம்செழிப்படையும். நிலங்களை அடிக்கடி கவனித்து வேண்டிய காரியம் செய்தால்தான் விவசாயம் செழிக்கும். வெள்ளாமையே உயர்ந்த செல்வமாயிருந்து உலகைக் காக்கிறது.

8. ஆழ உழுதல் ஆட்டுரத்துக்கும் அதிகம்.

ஆழ உழுவதன் சிறப்பு முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தை மேலாக உழுதால் ஒரு பலனும் இராது. அது வீண் பணச் செலவேயாகும். அப்படி உழுது ஆட்டுக்கிடை வைத்தும் பயன்படாது. ஆகையால் ஆழமாக உழுதல் மிக முக்கியமானது. ஆட்டுரத்துக்கும் மேலானது ஆழவுழுவதே.

9. ஆழ உழுதாலும் அடுக்க உழு.

ஆழமாய் உழுதபோதிலும் நெருக்கமாயும் உழவேண்டும். அகல உழுதால் இடையில் உழாத தரை கிடந்துவிடும். ஆகையினால் நெருக்கமாய் உழவேண்டும். அப்படிச்செய்தால் விதைப்பதற்கு வேண்டிய சௌகரியம் ஏற்படும்.

10. ஆற்று மண்ணுக்கு வேற்று மண் உரம்.

ஆற்று மண் வண்டலை யுடையதாய் இருந்தால் அதுவே உயர்ந்த உரம். நிலம் மணலா யிருந்தால் வேற்று மண்ணைக் குளத்து வண்டலைப் போட்டால் பயிருக்கு நல்ல உரமாகும்.

11. இளைத்தவன் எள்ளை விதைப்பான்.

எள்ளு மிருதுவான பயிர். அதைப் பயிர் செய்வதில் அதிகச் சிரமம் இல்லை. செலவும் அதிகமாக ஏற்படாது. ஆதலால் யாரும் அதைப் பயிர் செய்து பயன் பெறலாம்.

12. ஈர விதைப்பும், ஈரூர் வேளாண்மையும், தாரமிரண்டும் தனக்குப் பகை.

ஒருவன் இரண்டு பெண்களை விவாகம் செய்துகொண்டு வாழ்வது துன்பம். ஏனெனில் அவர்கள் இருவருக்கும் அடிக்கடி சண்டைகள் ஏற்படும். அவற்றைச் சமாதானம் செய்வது கடினம். இருவருக்கும் கேட்ட பொருளை யெல்லாம் வாங்கிக்கொடுத்து அவர்கள் மனம் போல் நடக்கவும் முடியாது. இதனால் இல்லறம் நடத்த முடியாது போய்விடும். இது போலவே இரண்டு ஊர்களில் நிலங்கள் இருந்தால் வேளாணமை செய்தல் கஷ்டம். இரண்டையும் கவனித்து, பருவத்துக்குத் தகுந்தபயிர்செய்வது முடியாது. ஆனதுபற்றியே அண்டை நிலத்தை யும் அயல் மனையையும் கைவிடாதே என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிக ஈரமுள்ள நிலத்தில் விதைத்தால விதை முளையாது; மண்ணோடு சேர்ந்து மட்கிப்போய் வீணாகும். நன்றாய் உழுதுகாய்ந்த நிலத்தில் விதை விதைத்தால் பயிரும் செழித்து வளரும்.

13. உழவற உழுதால் விளைவற விளையும்.

நிலத்தை நன்றாக உழுதால் பயிர்களும் குறைவில்லாமல் அதிகமானபலனைக்கொடுக்கும். [முன் 1, 8, 9-பழமொழிகளையும் பார்க்க.]

14. உழவிலும் பகை எருவிலும் தீராது.

உழுவதில் பகை காட்டினால், அதாவது நன்றாய் உழாவிட்டால், பின் எவ்வளவு எரு விட்டபோதிலும் நிலம் சீராகாது. நன்றாய் உழுதால் எருவிடுதலுக்குக் கூட அதிகச் செலவாகாது. உழவைக் குறைத்தால் விளைவும் குறையும். [முன் 8-வது பழமொழியைப் பார்க்க.]

15. உழவு உழுது காய்ந்தால் வித்திரட்டி காணும்.

நிலத்தை நன்றாய் உழுது புழுதியாக்கிக் காயவைத்தால் விதைப்பதற்கு அனுகூலமாயிருக்கும். உழுதவுடன் காயவிடாமல் விதைத்தால் மண் கட்டியாகி வித்தை முளைக்கவிடாது.

ஆதலால் அறுப்பு அறுத்தவுடன் உழுது நிலத்தை அவசியம் காய விடவேண்டும். பிறகு விதை விதைக்குமுன் உழுதால் பயிர் நன்றாக முளைத்து மாசூலும் அதிகமாய்க் காணும்.

16. உழவு நட்பில்லாத நிலமும், மிளகுநட்பில்லாத கறியும் வழவழ.

நாம் உண்ணும் கறிக்கு மிளகு சேர்க்காவிட்டால் சுவையாய் இராது. அதுபோல உழவு இல்லாவிடில் நிலமும் பயன் படாது. நன்றாய் உழப்படாத நிலத்தில் எவ்வளவு உரம் போட்டபோதிலும் பயிர் உண்டாகாது. பயிரின் வேர்கள் பூமிக்குள் செல்ல முடியாமல் உழப்படாத கட்டியான தரை தடுத்துவிடும்.

17. உழுது அலர்ந்தது பழுதாகாது.

நிலத்தை உழுது காயவிட்டால் அதனால் ஒரு கெடுதியுமில்லை. உழுது காய்ந்த நிலத்திலேதான் மாசூலும் அதிகமாகக் காணும். இதை யொட்டியே முன்னால் பதினைந்தாவது பழமொழியும் சொல்லப்பட்டுள்ளது.

18. எண்ணெய் காணுத மயிரும், தண்ணீர் காணுத பயிரும்.

நாம் தலைக்கு அடிக்கடி எண்ணெய் தேய்த்து உரோமத்தைச் சிக்கல் எடுத்துச் சீர்ப்படுத்துகின்றோம். இல்லாவிடில் உரோமம் கெட்டுப்போவதுடன் பேன் முதலியவை பற்றி, தேகம் அசௌக்கியம் அடையும். அதுபோலப் பயிருக்கும் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இல்லாவிடில் பயிர் காய்ந்து கெட்டுவிடும். தண்ணீர் பூமியிலுள்ள மரவுணவு சாரத்தை இலேசாக்கிப் பயிர்களுக்கு அளிப்பதால் அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும்.

19. எருவில்லாப் பயிர் கன்றில்லா மாட்டைப்போல்.

பசு தன் கன்றைக் காணுவிடின் வாடி வருந்தும். அன்றியும் கன்று இருந்தால்தான் பசு பால் கொடுக்கும். கன்று இல்லாவிடில் பால் வற்றிப் போகும். அதுபோல எருப் போடாவிடில் வயல் கெட்டுப்போகும். அதில் விளையும் பயிரும் செழிப்பாயிராது; நல்லபலனையும் தராது. [14-வது பழமொழியைப் பார்க்க.]

20. எள்ளுப் பயிராணுலும் நெற்பயிர் செய்.

நெற்பயிர் எல்லாத் தானியப் பயிர்களிலும் உயர்ந்த பயிர். முதலில் எள்ளு விதைத்து அச் செடிகளை உழுது நெல் விதைத்தால் நெற்பயிருக்கு நல்ல உரமாகும். எள்ளுப் பயிரில் கிடைக்கும் லாபத்தைக் காட்டிலும் நெற்பயிரில் கிடைக்கும் லாபம் அதிகமாகும். ஆதலால் எள்ளுப் பயிராணுலும் அதை மடக்கி உழுது நெல்லை விதைத்தல் நல்லது.

21. கச்ச நிலமாணுலும் கைசேர்க்கை நன்று.

அக்கம் பக்கத்திலுள்ள நிலம் பிரயோசனமற்றதாயிருந்தாலும் அதைச் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். [முன் சொல்லியுள்ள 3-வது பழமொழியையும் பார்க்க.]

22. கடலை விதைப்பது கரிசல் நிலத்தில்.

கடலை கரிசல் நிலத்தில் நன்ருகப் பயிராகும். அன்றியும் மற்ற நிலங்களில் விதைப்

பதில் மழை தாமதித்தால் கெட்டுப்போகும். கரிசல் நிலத்தில் விதைப்பதால் மழை தாமதித்துப் பெய்தாலும் தாங்கிப் புலன் தருவது நிச்சயம்

23. கம்புக்குக் கால் உழவு.

நன்றாய் மழை பெய்தவுடன் கரிசல் நிலத்தில் இலேசாய் உழுது கம்பை விதைக்கலாம். அதற்குச் சொற்ப உழவு போதுமானது.

24. கரும்பு வைப்பது காணி நிலத்தில்.

கரும்பு ஒருவருஷத்துப்பயிர். நன்செயிலும் தோட்டக்கால்களிலும் அதிக விசாலமாக அது உண்டாகும். ஆகையால் அதை அதிக விசாலமான நிலத்தில் பயிராக்க வேண்டும்.

25. கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்; அடர விதைத்தால் அடுபோர் உயரும்.

மாசூல் அதிகமாகக் காணவேண்டுமானால் விதைகளை விசாலமாக விதைக்க வேண்டும். நெருக்கி விதைத்தால் மாசூல் அதிகம் காணாது. ஆனால் தாள் (வைக்கோல்) அதிகமாகக் காணும்; தானிய விளைவு குறையும்.

26. கல்லைப் பிளந்து காணம் விதை.

காணப் பயிர் சரலாயிருக்கிற செவ்வல் நிலத்திலும் பயிரிடலாம். கற்கள் அதிகமாயிருந்தாலும் அந்நிலத்தில காணத்தை விதைக்கலாம். மேலும் இப்பயிர் சொற்ப மழையில் பனி நீரை அதிகமாய் உட்கொண்டு வளரும். விஸ்தாரமான இடத்தில் இது தனிமையாக நன்றாய் வளரும். இதைப் புன்செய் நிலங்களிலும் கற்கள் உள்ள வறட்சியான இடங்களிலும் இலேசாய்ப் பயிர்செய்து பலனடையலாம்.

27. கள்ளி வேலியே வேலி; கரிசல் நிலமே நிலம்.

வேலிக்காகக் கள்ளியை வைத்தால் அது சீக்கிரத்தில் வளர்ந்து நல்ல வேலியாக அமையும். புன்செயில் கரிசல் நிலமே சிறந்தது. அதில் பருத்தி நன்றாய் விளையும். மழையும்

அதற்கு அதிகம் வேண்டுவதில்லை. கரிசல் நிலம் மற்ற நிலங்களைப்போல் சீக்கிரத்தில் காய்ந்துவிடாது; தன்னிடத்திலுள்ள ஈரத்தால பயிர்களைப் பாது காத்து வளரச் செய்யும்.

28. களை யெடாதவன் விளை வெடான்.

பயிருக்கு ஊடே முளைக்கும் வேறு புல், பூண்டு முதலிய செடிகளுக்குக் 'களை' யென்று பெயர். இந்தக் களையை வளரவிட்டால் பயிருக்கு வேண்டிய உணவுப் பொருளை அவை நிலத்திலிருந்து உட்கொண்டுவிடும். மேலும் பயிர்களோடு நெருங்கி முளைத்து அவற்றின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும். நிலத்திலிருந்து களைகளை எடாமலிருந்தால் பயிர் நசித்துப் போகும்; விளைவும் அதிகம் இராது.

29. களை யெடாப் பயிர் கால் பயிர்.

நிலத்திலுள்ள களைகளை எடுக்காவிட்டால் பயிர் நன்றாய் வளராது. விளைவு கால்மேனி கூடக் காணாது. [முன் பழமொழியைப் பார்க்க.]

30. காடு வளம் குண்டை வளம்; குண்டை வளம் குடி வளம்; குடி வளம் கோயில் வளம்; கோயில் வளம் கோன்வளம்.

காடுகள் செழிப்பா யிருந்தால் குண்டை என்கிற ஆடு மாடுகள் புல் பூண்டுகளை நன்றாய் மேய்ந்து விருத்தியாகும். ஆடுமாடுகள் விருத்தியானால் குடிகள் செழிப்படைவார்கள். குடிகள் செழிப்பா யிருந்தால் கோயிலுக்கும் பூசைப் பூசை முதலியவை நடைபெறும். கோயில்களில் பூசை முதலியன சிறப்பாய் நடந்தால் அரசனும் சிறப்பாக இருப்பான். அதனால் நாடெங்கும் செழிப் புண்டாகும்.

58966

31. கார் ஆடு; பிசானம் கொழை.

கார் என்னும் பெயருள்ள நெல் பயிர் விதைத்த மூன்று மரதங்களில் பயன் தரும். அதற்கு ஆட்டுரம் போதுமானது. பிசானம் என்பது கார் அறுத்தபின் விதைக்கப்படும் பயிர். இதற்குப் பசுந்தாள் உரம் சிலாக்கியமானது. கார் அறுத்தபின் கொள்ளு முதலிய இலேசான பயிரைப் பயிர்செய்து அவற்றை உழுது மறுபடி பிசானப் பயிர் செய்தால் மாசூல் அதிகம் கிடைக்கும். (முன் 6-வது பழமொழியைப் பார்க்க.)

32. காராம் பசுவிற்குப் புல்லுமாம், நந்தவனத்திற்கு மழையுமாம்.

காராம் பசுவிற்கு ஏராளமான புல்லைப் போட்டால் அதற்குத் தகுந்தபடி அதிகப் பாலைக் கொடுக்கும். அது போல நந்தவனத்திற்கு அடிக்கடி நல்ல மழை வேண்டும். அப்படிப் பெய்தால் புஷ்பங்கள் ஏராளமாகப் புஷ்பிக்கும்; செடிகளும் வாடாமல் செழிப்புற்று நன்ருய் வளரும்.

33. கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கும்.

தோட்டக்கால் பயிர்களுக்குக் கிணற்றுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுவது அவசியம். கிணற்றை அடிக்கடி ஆழமாகத் தோண்டி ஊற்றுக்கண்கள் அடைபட்டுவிடாமல் கவனிக்க வேண்டும். இன்னும் பக்கத்திலுள்ள மண் கிணற்றில் சரிந்து விழாமல் சுவர் கட்டிப் பாது காக்க வேண்டும். இப்படிச் செய்தால் பயிருக்குத் தட்டாமல் நீர் கிடைக்கும். குடியானவன் ஜீவனத்துக்கு வேண்டிய உணவும் கிடைக்கும்.

34. குப்பை உயர்ந்தால் குடி உயரும்.

நிலத்திற்கு அதிகமான எருவிட்டால் பயிர் செழிக்கும். பயிர் செழித்தால் குடிகள் நல்ல பலனை யடைந்து சிறப்பாய் வாழ்வார்கள். (முன் 30-வது பழமொழியைப் பார்க்க.)

35. கொம்பால் உழுது குண்டியால் மரமடி.

கொம்பு என்பது ஏரின் கொழு. இதனால் நிலத்தை நன்ருய் உழுது கட்டிகளை உடைத்துப் புழுதியாக்கிக் குண்டி யென்னும் கட்டையால் ஒரே சமமாக்க வேண்டும். இவ்வாறு சமமாகச் செய்தால் விதைப்பதற்கும் நடுவதற்கும் சாதகமாக இருக்கும்.

36. கோப்புத் தப்பினுல் குப்பையும் பயிராகாது.

கோப்பு என்பது காலம். ஒவ்வொரு பயிரும் பயிர் செய்வதற்கு ஒவ்வொரு காலம் உண்டு. அந்தக் காலத்திலேயே அந்தந்தப் பயிர் செய்யவேண்டும். பருவந் தப்பிப் பயிர் செய்தால் விளையாது. அந்தந்தக் காலத்தில் விதைக்க

வேண்டிய வித்துக்களையே விதைக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் எவ்வளவு உரம் போட்ட போதிலும் நிலம் பலன் கொடாது.

37. சாண் உழவு முழ எருவுக்குச் சமானம்.

ஒருச் சாண் ஆழம் உழுதால் ஒரு முழ உயரம் எருவிட்டதற்குச் சமானம். ஆழ உழுதால் வேர்கள் பூமிக்குள் செல்லுதல் கூடும். அங்கிருந்து பயிருக்கு வேண்டிய உணவு கிடைக்கும். ஆகையால் அதிக எருப் போடுவதைப் பார்க்கிலும் அதிக ஆழம் உழுவது சிலாக்கியம். (முன் 8-ம் பழமொழியைப் பார்க்க.)

38. சாமைப் பயிர் விளைந்தால் தெரியும்.

சாமை சத்தில்லாத புன்செய் நிலத்திலும் அதிகமாய்ப் பயிராகும். இதற்கு உமிப்பிடிப்பு அதிகம். நன்றாய் விளைவதற்கு முன்னால் தானியம் எவ்வளவு காணும் என்பது தெரியாது; விளைந்த பின்புதான் மாசூல் தெரியும்.

39. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்.

கோடையில் நிலம் உழப்பட்டுப் புழுதியாயிருந்தால் நல்ல விளைவைக் கொடுக்கும். கோடை உழவு மிகவும் சிலாக்கியம். சித்திரை மாதத்தில் உழுவது பத்தரை மாற்றுத் தங்கத்திற்கு ஒப்பானது. (தங்கத்தில் பத்தரை மாற்றுத் தங்கம் உயர்ந்தது. சித்திரைமீ சுமார் ஏப்பிரல்மீ 11உ ஆரம்பிக்கிறது.)

40. சோளப் பயிர் மேய்ந்த மாட்டுக்குச் சுவர்க்கலோகம் வேண்டுமோ?

சோள நாற்று மாடுகளுக்கு நல்ல தீனி. அதை மேய்ந்தமாடுகள் மிகவும் புஷ்டியுடையதாயிருக்கும். சோளப் பயிர் தின்பதைவிட மாடுகளுக்கு வேறு உயர்ந்த இன்பம் இல்லை.

41. சோற்றுக்கு ஏமாந்தவன் சோளத்தை விதை.

சோளம் தேகபுஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஒரு உணவுப் பொருள். இது சாதாரண நிலத்தில் பயிராகக்கூடியது. இதைப் பயிர்

செய்ய அதிகப் பணச் செலவும் சிரமமும் வேண்டாம். ஆகையால் இதை மிக ஏழைகளும் பயிர் செய்து ஜீவிக்கலாம்.

42. தாழ உழுதால் தளிரோடும்.

கொழுவை நன்றாயப் பூமியில் அழுத்தி உழுதால் பயிர் கொழுத்து வளரும். (ஆழ உழுவதைப்பற்றி முன் சொல்லிய பழமொழிகளைப் பார்க்க.)

43. தினை விதைக்க வினை விளையுமா?

தினைப் பயிர் நிலத்தின் சத்தை எடுத்து விடக்கூடியது. ஆதலால் அதைத் தனியாக விதைக்கக்கூடாது. விதைத்தால் நிலம் கெட்டுப் போகும். இது சாதாரணமாய்ப் பருத்தியோடு சேர்த்துப் பயிரிடப் படுகிறது.

44. தையுழவு ஐயாட்டுக்கிடை.

சில பயிர்கள் தை மாத ஆரம்பத்திலாவது சற்று முன்பாவது அறுவடையாகின்றன. அறுவடையானவுடன் நிலத்தை உழுது புழுதியாக்கினால் பிறகு நல்ல விளைவுக்கு ஏதுவாகும். தை மாதத்திய உழவு ஐந்து ஆட்டுக்கிடை

வைப்பதற்குச் சமமாகும். (தைமீ சுமார் ஜனவரிமீ 11உ ஆரம்பிக்கிறது. அப்பொழுது அறுவடைகால ஆரம்பம்.)

45. தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது.

பொருள் சம்பாதிப்பதில் பிறரிடம் சேவகத் தொழில் செய்து சம்பாதிப்பது ஒருவகை. நிலத்தை உழுது சம்பாதிப்பது ஒருவகை. இவைகளில் பிறர்க்கு அடங்கிச் சேவகத்தொழில் புரிந்து சம்பாதித்து நல்ல சுவையுள்ள பண்டங்களைச் செய்து உண்பதைவிட நிலத்தை உழுது அதனால் வரும் இலாபத்தைக்கொண்டு உண்பது இனிமையானதாகும். ஆதலால் சேவகத் தொழிலைவிட உழவுத்தொழில் மேலானது.

46. நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்வேருக்கு நெக்குவிடும்.

நல்ல கற்பாறை இரும்பினால் செய்யப்பட்ட [illegible]ப்பாரைக்குக் கூடப் பிளவுபடாது. ஆனால்

பசும் பயிர் அதன் மேல் உண்டானால், அப் பயிரின் மெல்லிய வேர் அப் பாறையைப் பிளந்து ஊடுருவிச் செல்லும்.

47. பசித்தவன் பயறை விளை.

பயறுவகைப் பயிர்கள் அனேகமாய்த் தானியப் பயிர்களோடு விதைக்கப்படுகின்றன. இவற்றைப் பயிர் செய்வதில் சிரமமில்லை. இவற்றின் தட்டைகளும் மாடுகளுக்கு நல்ல தீனியாகும். ஆதலால் பயறு விதைத்தால் குடியானவனுக்கும் மாடுகளுக்கும் ஏராளமான உணவு கிடைக்கும்.

48. பசு உரத்திலும், பழம் புழுதி நல்லது.

நிலத்தை முன்னதாகவே உழுது புழுதி யாக்கி வைத்தால் நல்ல மாசூல் கிடைக்கும். எருவை அதிகமாய்ப் போடுவதைப் பார்க்கிலும் உழுதல் நலம். (உழுவதைப்பற்றி முன் பழமொழிகளையும் பார்க்க.)

49. பருவத்தே பயிர் செய்.

இது 'கோப்புத் தப்பினால் குப்பையும் பயிராகாது,' என்ற முன் பழமொழியைப் போன்றது.

உழ வேண்டிய காலத்தைக் கவனித்து உழ வேண்டும். அதுபோலவே விதைக்கவேண்டிய காலத்திலும் விதைக்க வேண்டும். ஒவ்வொரு பருவத்தையும் கவனித்துச் செய்யவேண்டியதைச் செய்து முடிக்க வேண்டும்.

50. புகையிலைக்குப் புழுதிக் கொல்லை.

புகையிலையைப் பயிராக்குவதற்குத் தோட்டம் நன்றாய் உழப்பட்டுப் புழுதியாய் இருக்க வேண்டும். புழுதியில்தான் புகையிலை செழித்து நன்றாய் வளரும். இலைகளும் தாராளமாக நரம்புகள் ஓடி அகலமாகப் பருக்கும்.

51. புல்லற உழாதே.

நிலத்தை உழும்பொழுது புல் பூண்டுகள் பறிக்கப்படுகின்றன. அவை பூமிக்குள் சென்று மறுபடி முளைக்கா வண்ணம் அவைகளின் வேர் அற்று மேலே கிடந்து உலர்ந்து போகும்படி உழவேண்டும். பூமிக்குள் அவைகள் மண்ணோடு தங்கி மட்கிப் போனாலும் அல்லது [illegible]லாது போனாலும் மறுபடி முளைத்துவிடும்.

52. புன்செயிற் புதியது, நன்செயிற் பழையது.

புன்செய் நிலத்தில் அடிக்கடி பயிர் செய்வதால் நிலம் சாரம் இழந்ததாய்விடும். நன்செய் நிலத்தில் அடிக்கடி வண்டலையுடைய ஆற்று நீர் பாய்கின்றது. வண்டல் நிலத்தோடு சேர்ந்து நல்ல பூசாரம் அதிகப்படுகின்றது. ஆகையினால் புன்செய்யில் புதியதாகவும் நன்செய்யில் பழையதாகவும் பார்த்து வாங்கவேண்டும்.

53. புழுதி யுண்டானால் பழுதில்லை.

நன்றாய் உழுது புழுதியாக்கப்பட்ட நிலம் நல்ல விளைவைக் கொடுக்கும். (இதைப்பற்றிய முன் பழமொழிகளைப் பார்க்க.)

54. போடுகாலில் தேடிப்போடு.

அதிக பூசாரம் இல்லாத நிலத்தைச் சிறிது காலம் தரிசாகப் போடுவது வழக்கம். அப்படிப் போடப்பட்ட நிலத்திற்குப் போடுகால் என்று பெயர். அத்தகைய சத்தில்லாத நிலத்திற்கு

ஏராளமான எருவைத் தேடிப் போடவேண்டும். இன்னும் சில பயிரை வளர்த்து அவற்றை மடக்கி உழுதாலும் நல்லது. அன்றியும் நிலங்களில் உரம் போடவேண்டிய காலந்தவறுமல் கவனித்து உரம் போடவேண்டும்.

55. மடையன் வரகு விதைப்பான்.

வரகு சாமையைப்போல உமியை அதிகமாகக் கொண்டிருக்கும். அதன் வைக்கோலும் மாட்டிற்கு உணவாகாது. கூரை வேயத்தான் உதவும். ஆதலால் சாமர்த்தியமுள்ள குடியானவர்கள் இதை விதைக்கமாட்டார்கள்.

56. மணலுழுதுவாழ்ந்தவனும் இல்லை மண்ணுழுது கெட்டவனும் இல்லை.

'கரிசல் நிலமே நிலம்' என்றபடி மண் பாங்கான நிலமே விவசாயத்திற்கு ஏற்றது. நல்ல பலனைத்தரும். மணற்பாங்கான நிலம்விவசாயத்திற்கு ஏற்றதல்ல. நல்ல பலனைத்தராது.

57. மாடு மேயாத மட்டப்புற் கட்டையை ஆடு மேய்ந்து அதி திருப்தி யாகும்.

ஆடுகள் மனிதருக்குப் பிரயோசனம் உள்ள பிராணிகள். வெள்ளாட்டின் பால் மருந்துக்கு உதவும். ஆட்டின் உரோமம் கம்பளம் நெய்ய உதவும். அநேகர் ஆட்டு இறைச்சியை உண்கிறார்கள். அதன் உரம் நிலத்திற்கு எருவாகும். மாடுகள் மேய்வதற்குப் புல் இல்லாத காலத்திலும் ஆடுகள் வெட்டப்பட்டு வாடியிருக்கும் புற்கட்டைகளையும் மேய்ந்து ஜீவிக்கும் ஆடுகள் அநேகமாய் எல்லாக் கொழைகளையும் தின்பதால் அதை வளர்ப்பது எளிது.

58. மாட்டு எரு புன்செய்க்கு, தழை எரு நன்செய்க்கு.

புன்செய் நிலத்திற்கு மாட்டு எரு நல்லது. நன்செய் நிலத்திற்குப் பசுந்தாள் உரம் நல்லது. (முன் 6-வது பழமொழியையும் பார்க்க.)

59. மாரி யல்லது காரிய மில்லை.

மழை பெய்யாவிடில் விவசாயம் செய்ய முடியாது. உலகத்திலே மழையை வைத்துத் தான் எல்லாக் காரியங்களும் நடக்கவேண்டும். மழை பெய்தால்தான் நிலம் விளையும். நிலம் விளைந்தால்தான் மனிதரும் மற்றய ஜீவப்பிராணிகளும் ஜீவிக்கமுடியும்.

60. மேழிச் செல்வம் கோழை படாது.

கலப்பையைக் கொண்டு நிலத்தை உழுது ஜீவிப்பதில் யாதொரு குறைவும் இல்லை. உண்மையில் அதுவே உயர்ந்த பிழைப்பு. (இதைப் பற்றிய முன் 46-வது பழமொழியைப் பார்க்க.)

61. வரப்புத் தேய வயிறு நிறையும்.

நன்செய் நிலங்கள் விசாலமாய் இருக்க வேண்டும். இடையிடையே வரப்புக்கள் அதிகம் இருக்கக் கூடாது. நிலம் அதிகப் பரப்புடையதாய் இருந்தால் தான் அதற்குத் தக்கபடி மாசூல் அதிகம் கிடைக்கும்.

62. வெக்கைக்கு வேலி மறைப்பு.

பயிர்களைச் சுற்றி வேலி இருந்தால் அதிக உஷ்ணத்திலிருந்து அவைகளைக் காப்பாற்றும். அதுபோலவே ஆடு மாடுகளும் வெயில் நேரத்தில் வேலிக்குள்ளே இருந்தால் உஷ்ணம் அவைகளின் மேலே படாது.

63. வெண்ணெய் போல் உழவும் குன்றுபோல் விளைவும்.

நிலத்தை நன்றாய் உழுது கட்டிகளை உடைத்து நல்ல புழுதியாக ஆக்கவேண்டும். உழப்பட்ட மண் வெண்ணெய்போல் மெல்லியதாய் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் தானியம் ஏராளமாக விளைந்து குன்றுபோலக் குவிந்து நல்ல மாசூல் காணும். “கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும்” என்ற பழமொழிப்படி விதை விதைப்பதற்கு மண் வெண்ணெய் போல் புழுதியா யிருந்தால் தான் மாசூல் அதிகமாகக் கொடுக்கும்.

வான் சிறப்பு.

1. வானின் றுலகம் வழங்கி வருதலாற் றானமிழ்த மென்றுணரற் பாற்று.

பதவுரை.

வான்-மழையானது,
நின்று - (நடுவே நீங்காது) நிற்க,
உலகம் - உலகத்திலுள்ள உயிர்கள்,
வழங்கிவருதலால் -ஜீவிக்கப் பெற்று வருகையினால்,
தான்-(அம்மழை) தான்,
*அமிர்தம் என்று - (உயிர்களுக்கு) அமிர்தம் என்று,
உணரல் பாற்று - அறியப்படும் தன்மையை உடையது.

(பொ-ரை) மழை காலந்தவறாது பெய்து வருவதால் உலகத்திலுள்ள உயிர்கள் சரியான நிலையில் ஜீவித்து வருகின்றன. ஆதலால் மழையானது உலகத்திற்கே அமிர்தம் என்று நாம் கருதக்கூடியதாக இருக்கிறது.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப் பார்க்குத் துப்பாய தூஉ மழை.

பதவுரை.

துப்பார்க்கு-உண்பவர்க்கு,
துப்பாய-நன்மையாகிய,
துப்பாக்கி-உணவுகளை உண்டாக்கி,
துப்பார்க்கு - (அவ்வுணவுகளை உண்பவருக்கு,
துப்பாயதும் - தானும் உணவாய் நிற்பதும், மழை:—

(பொ-ரை) உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை யெல்லாம் உண்டாக்கிக் கொடுப்பதுடன் அவற்றை உண்பவருக்குத் தானும் ஓர் உணவாய் நின்றுதவுவது மழை.

---

* அமிர்தம் - சாவா மருந்து.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனு
துண்ணின் றுடற்றும் பசி. [லகத்

பதவுரை.

விண்-மழையானது,
நின்று-பெய்யவேண்டுங் காலத்தில்) பெய்யாமல் நின்று,
பொய்ப்பின் - பொய்க்குமாயின்,
விரிநீர்-விரிந்தகடலாற்சூழப் பட்ட,
வியன் உலகத்துள் - பரந்த உலகத்தில்,
பசி - பசியானது
நின்று - நிலைபெற்று,
உடற்றும் - (உயிர்களை) வருத்தும்.

(பொ-ரை) மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது போகுமாயின் கடல் சூழ்ந்த அகன்ற இவ் உலகத்தில் பசியானது உயிர்களை வருத்தும்.

4. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

பதவுரை.

புயல் என்னும் - மழை என்கின்ற,
வாரி - வருவாய்,
வளம் குன்றிக்கால் (தன்) பயன் குறையுமாயின்,
உழவர் - பயிர் செய்யும் மக்கள்,
ஏரின் - ஏரினால்,
உழார்-உழுதலைச்செய்யார்.

(பொ-ரை) மழை பெய்யாவிடில் உழவர் தங்கள் நிலங்களில் உழுதலைச் செய்யமுடியாது.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்
யெடுப்பதூஉ மெல்லா மழை. [மற்றாங்கே

பதவுரை.

கெடுப்பதும்- (பெய்யாது நின்று கெடுப்பதும்,
கெட்டார்க்கு - (அவ்வாறு) கெட்டவர்க்கு,
சார்வாய் - துணையாய் (நின்று),
மற்று அங்கே - முன் கெடுத்தது போலவே,
எடுப்பதும்-அவர்களை வாழ்விப்பதும்,
எல்லாம் - (இவை) எல்லாம்,
வல்லது-தக்கது, மழை-.

(பொ-ரை) மழையானது பெய்யாமல் நின்று உயிர்களைக் கெடுப்பதும் பெய்து அவைகளை வாழ்விப்பதும் ஆன வல்லமையுடையது.

6. விசும்பிற் றுளி வீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

பதவுரை.

விசும்பின்-மேகத்தினின்றும்
துளி - (மழைத்) துளிகள்,
வீழின் அல்லால் - வீழக் காண்பதல்லது,
மற்று ஆங்கே-(வீழாதாயின்) அப்பொழுதே,
பசும்புல் தலை-பசும் புல்லினது தலையையும்,
காண்பது அரிது - காணுதல் கூடாது.

(பொ-ரை) உலகத்தில் மழை பெய்தால் பசும் புற்களைக் காணலாம். மழை பெய்யாவிடில் அவைகளைக்காண முடியாது.

7. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெ
தானல்கா தாகி விடின். [ழிலி

பதவுரை.

எழிலிதான்-மேகந்தான், [து	நெடுங்கடலும்-பெரிய கடலும்,
தடிந்து-கடல்நீரைக் குறைத்	தன் நீர்மை-தன்னியல்பு,
நல்காதாகிவிடின்-அதனிடத்	குன்றும்-குறையும்.
துப் பெய்யாதாகிவிடின்,	

(பொ-ரை) மழை பெய்யாது போமாயின் கடலிலும் தண்ணீர் வற்றிவிடும்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்கு மேல் வானோர்க்கு மீண்டு.

பதவுரை.

வானம்-மழை,	ஈண்டு-இவ்வுலகத்தில்,
வறக்குமேல்-பெய்யாதாயின்	சிறப்பொடு- திருவிழாவோடு
வானோர்க்கும் - தேவர்களுக்	பூசனை-நித்திய பூசை,
கும்,	செல்லாது-நடவாது.

(பொ-ரை) மழை இல்லாவிடில் தேவர்களுக்கு மக்களால் செய்யப்படும் பூசையும் நடவாது.

9. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம் வானம் வழங்கா தெனின்.

பதவுரை.

வானம்-மழை, [யின்,	தானம்தவம்இரண்டும்-தான
வழங்காதெனின்-பெய்யாதா	மும் தவமுமாகியஇரண்டும்,
வியன் உலகம் - பெரிய உல	தங்கா-உண்டாகாவாம்.
கத்தில்,	

(பொ-ரை) மழையில்லாவிடில் உலகத்தில் தானமும் தவமும் நிகழமாட்டா.

10. நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும் வானின் றமையா தொழுக்கு.

பதவுரை.

யார் யார்க்கும்-எவ்வகைமே	- தாதாயின்,
ம்பட்டோருக்கும்,	ஒழுக்கு-(அந்நீரினது நடுவே நீங்காத) ஒழுக்கமும்,
நீர் - நீரை,	வான் - மழையை,
இன்றி-இல்லாமல்,	இன்றி-இல்லாமல்,
உலகு-உலகியலானது,	அமையாது-பொருந்ாது.
அமையாது எனின்-பொருந்	

(பொ-ரை) எவ்வளவு மேன்மை யுடையவருக்கும் தண்ணீர் இன்றியமையாதது; அந்த நீர் எப்பொழுதும் கிடைக்க வேண்டுமானால் மழை பெய்யவேண்டும்.

உழவு.

1. சுழன்று மேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை.

பதவுரை.

உலகம்-இவ்வுலகமானது, சுழன்றும்-(உழுதலால் வரும் மெய் வருத்தம் நோக்கி வேறு தொழில்களைச் செய்து) திரிந்தும், ஏர்ப்பின்னது-(முடிவிலே) ஏருடையார் வழியதாயிற்று, அதனால் - ஆதலால், உழந்தும்-(எல்லா) வருத்த முற்றும், தலை-தலைமையாகிய தொழில், உழவே-உழுதலேயாகும்.

(போ-ரை) எந்தத்தொழிலைச் செய்பவரும் உழவரிடத்திலிருந்தே உணவுபெற வேண்டும்; அதனால் எவ்வளவு வருத்தம் இருப்பினும் உணவுப்பொருளுக்குக் காரணமாகிய உழவே முதன்மையான தொழில்.

2. உழுவா ருலகத்தார்க் காணி யஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

பதவுரை.

உழுவார்-உழுதலில்வல்லவர், அஃது-ஆற்றாது - அவ்வுழுதலைச் செய்யமாட்டாமல், எழுவாரை எல்லாம் - (பிற தொழில்களிலே) மேற்செல்வோர் யாவரையும், பொறுத்து-தாங்குதலால், உலகத்தார்க்கு-உலகத்தாராகிய (தேர்க்கு), ஆணி-அச்சாணியாவர்.

(போ-ரை) உழமுடியாது மற்றைத் தொழில்களைச் செய்பவரையும் உழவரே பாதுகாப்பதால் உலகத்தாராகிய தேருக்கு அவர் அச்சாணியாவர். (உழவ ரில்லாவிடில் அச்சாணியில்லாத தேர் வீழ்வதுபோல உலகம் விழுந்து விடும்.)

3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்
தொழுதுண்டு பின்செல் பவர். [லாந்

பதவுரை.

உழுது-(எல்லாரும் உண்ணும்படி) உழுதலைச்செய்து, உண்டு - (அதனால் தாமும்) உண்டு, வாழ்வாரே - வாழ்கின்றவர்களே, வாழ்வார்-(தமக்கு உரியாராய்) வாழ்கின்றவர்; மற்றெல்லாம் - மற்றவரெல்லாரும், தொழுது-(பிறரை) தொழுது உண்டு - (அதனால் தாம்) உண்டு, பின் செல்பவர் - (அவர்) பின் செல்லுகின்றவர்.

(போ-ரை) உழுது பயிர்செய்து தாமும் உண்டு பிறரும் உண்ணும்படி செய்கின்றவரே தமக்குரியராவர். மற்றையோர் பிறரைத்தொழுது அதனால் தாமுண்டு அவர் பின் செல்கின்றவராவர்.

4. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

பதவுரை.

அலகு உடை-(உழுதல் தொழிலால்) நெல்லை யுடையவராகிய, நீழலவர் - * தண்ணளியுடையோர், பலகுடை நீழலும்- பலவேந்தர் குடை நிழலதாகிய (பூமி முழுதையும்,) தம் குடைக்கீழ்-தம் (வேந்தர்) குடைக்கீழே, காண்பர்-காண்பார்கள்.

(பொ-ரை) உழுதல் தொழிலால் நெல் முதலிய தா னியங்களையுடையார் பலவேந்தர் குடைநிழலாகிய பூமிமுழு தும் தம் வேந்தர் குடைக்கீழ்க் காண்பர்.

5. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

பதவுரை.

கை - தம் கையால்,
செய்து-(உழுதல்) செய்து,
ஊண் மாலையவர் - உண்ணு தலை இயல்பாக வுடையவர்,
இரவார் - (பிறரிடம் சென்று தாம்) இரவார்;

இரப்பார்க்கு-(தம்மை) யாசிப்பவர்க்கு,
ஒன்று-அவர் (வேண்டியது) ஒன்றை,
கரவாது-ஒளிக்காமல்,
ஈவர்-கொடுப்பார்.

(பொ-ரை) உழுது உண்பவர் பிறரிடத்துத் தாம் சென்று யாசியாது தம்மிடம் வந்து யாசிப்பவர்க்குக் கொடுக்குந் தன்மை யுடையவராவர்.

6, உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. [உ-ப்

பதவுரை.

உழவினர் - உழுதலையுடையவர்,
[கைம]டங்கின்,- கை (அதனைச் செய்யாது) மடங்குமாயின்,
விழைவதூஉம் - (யாவரும்) விரும்பும் உணவும்,

விட்டேம்என்பார்க்கு - து[ற]ந்தோம் என்பார்க்கும்,
நிலை-(அவ்வறத்திலே) நிற்கின்ற நிலை.
இல்லை-உளவாகா.

(பொ-ரை) உழவர் பயிர்த்தொழில் செய்யாது நிற்பராயின் யாவரும் விரும்புகின்ற உணவைத் துறந்தவர்களுக்கும் அவர்நிற்கின்ற நிலை யில்லாது போகும்.

[தொ]டிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெரு
வேண்டாது சாலப் படும். [வும்

பதவுரை.

[ஒ]ரு நிலத்தினை உழுதவன்)
[தொ]டிப்புழுதி - ஒரு பலப்புழுதி,
[illegible]-கா ற்பலமாகும்படி,
[illegible] - (அதனைக்) காய விடுவானாயின்,

(அதனிடத்துச் செய்தபயிர்)
பிடித்து எருவும்-ஒரு பிடியில் அடங்கிய எருவும்,
வேண்டாது - (இட) வேண்டாமல்,
சாலப்படும்-பருத்துவிளையும்

(பொ-ரை) உழவர் தம் நிலத்தை ஒருபலப் புழுதி [கா]ற்பலமாகக் காய விடுவாராகில் அந்நிலம் ஒரு பிடி எருவு[மி]ல்லாது பயிர் செழித்து விளையும்.

[ஏ]ரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

பதவுரை.

(அப்பயிர்க்கு)
[ஏ]ரினும்-அவ்வுழுதலினும்,
[எ]ரு இடுதல்-எருப்பெய்தல்,
[ந]ன்று-நல்லதாம்;
[க]ட்டபின் - (இவ்விரண்டுஞ்

செய்து) களை பிடுங்கியபின்,
அதன் காப்பு-அதனைக் காத்தல்,
நீரினும்-நீர்ப்பாய்ச்சலினும்,
நன்று-நல்லதாகும்.

(பொ-ரை) உழவர் தம் நிலத்தை உழுவதைக்காட்[டி]லும் எருப்போடுதல் நல்லது; களைபிடுங்கிய பின் நீர்ப்[பா]ய்ச்சுவதைக் காட்டிலும் தம்நிலத்தை மாடுகள் அழித்து[வி]டாமல் காத்தல் நன்று.

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

பதவுரை.

கிழவன் - (அந் நிலத்துக்கு) உரியவன்,
செல்லான்-(அதனிடத்து நாள்தோறும்) போய்ப்பார்த்து வேண்டியவை செய்யானாகி,
இருப்பின் - (சோம்பி) இருந்தால்,

நிலம்-அந்நிலம்,
இல்லாளின்-மனைவிபோல,
புலந்து-(தன்னுள்)வெறுத்
ஊடி விடும்-(அவனோடு) பிணங்கி விடு

(பொ-ரை) உழவர் தம் நிலத்தை அடிக்கடி போய்ப் பார்க்காவிடில் அந்நிலத்தின் விளைவு குன்றிவிடும்.

10. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
நிலமென்னு நல்லா ணகும்.

பதவுரை.

இலம் என்று - வறியேமென்று சொல்லி,
அசைஇ இருப்பாரை-சோம்பியிருப்பவரை,
காணின்-கண்டால்,

நிலம் என்னும் நல்லாள்-நில மகள் என்று சொல்லப்படுகிற நல்லாள்,
நகும் - (தன்னுள்ளே) சிரிப் பாள்

(பொ-ரை) சிறிது செலவு செய்து பெரிது பயன் பெறுவதாயிருந்தும் உழவர் தரித்திரத்தினல் உழவு செய் யாதிருந்தால் நிலமானது அவரைக் கண்டு சிரிக்கும்.

58916